**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# வெளிப்படையாக ஒருவரை சரிசெய்வது சரியா?

## பகுத்தறிதல் என்றால் என்ன?
## குற்றபடுத்துதல் என்றால் என்ன?

வேதவாக்கியங்களின் வெளிச்சத்தில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை இப்போது பார்ப்போம்.

**1 தெசலோனிக்கேயர்** 5: 21 எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

பிரார்த்தனை, மனநிறைவு, மகிழ்ச்சியுடன் இருப்பது, எப்பொழுதும் தேவனுக்கு நன்றி செலுத்துவது, என்பது கிறிஸ்த வாழ்க்கைக்கு அடிப்படை என்று நம்முடைய பிதாவின் தூண்டுதலால் பவுல் நமக்கு தெரிவிக்கின்றார். மேலும் அதேபோல அவர் நாம் ஆராய்ந்து பார்ப்பது/ பகுத்தறிதல் பயனுள்ள கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை நல்லொழுக்கம் ஆகும் என்றார்.

உடனடியாக சபைகள், அது போதகர் அல்லது தலைவர்களின் பொறுப்பு என்ற நினைக்கிறார்கள். அது நிச்சயமாக தலைவர்களின் பொறுப்புதான் ஆனாலும் முழுசபையும் அதை செய்யவேண்டும். தலைவர்களுக்கு அதில் அதிக

பொறுப்பு இருந்தாலும் சபையில் உள்ள அனைவர்க்கும் அதில் பங்கு உள்ளது.

புதிய ஏற்பாட்டில் பெரும்பாலான அழைப்பு தலைவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

**1 தீமோத்தேயு 4: 6–7,** [6]. இவைகளை நீ சகோதரருக்குப் போதித்துவந்தால், விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும் நீ அநுசரித்த நற்போதகத்திலும் தேறினவனாகி, இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய். [7]. சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவபக்திக்கேதுவாக முயற்சிபண்ணு.

தேவ சத்தியத்திற்கும் உலகின் முட்டாள்தனத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை தீமோத்தேயு தெரிந்து கொள்ள வேண்டும்.

சத்திய கோட்பாடு மற்றும் ஆபத்தான தத்துவம் ஆகியவற்றிற்கு இடையிலான வித்தியாசத்தை தீமோத்தேயு சொல்ல முடியாவிட்டால், சபையையும், விசுவாசிகளையும் அவர் பாதுகாக்க முடியாது.

மேலும் பவுல் வெளிப்படையாக வேதம் வாசிப்பதை கைவிடவேண்டாம் என்று தெளிவாக தீமோத்தேயுக்கு அறிவுறுத்துகிறார்.

**1தீமோத்தேயு 4:13-14,**[13] நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு. [14]. மூப்பராகிய சங்கத்தார் உன்மேல்

*கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே.*

*வேதத்தை வாசிப்பது எப்படி என்ற போதித்த பிறகு முக்கியமான காரியத்தை நமக்கு சொல்லி கொடுக்கிறார்*

**1 தீமோத்தேயு 4:16,** *உன்னைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்.*

## *எனவே நாம் எப்படி பகுத்தறிவது அல்லது தீர்ப்பளிப்பது?*

## *பகுத்தறிதல்*- discernment:

'DOKIMAZO' *என்றால் -- சோதனை செய்ய, ஆய்வு செய்ய, விளங்கச்செய்ய, கண்டுபிடிக்க, ஒப்புதல் அளிக்க, நிரூபிக்க, அங்கீகரிக்க, செயல் விளக்கம் அளிக்க.*

'Anakrino' *என்றால் – கேள்வி கேட்க, ஆய்வு செய்ய, ஆராய, தேட.*

'DIAKRINO' *என்றால் – தரம் பிரிக்க; ஒவ்வொரு பகுதியும் முழுமையாகப் எடைபோட.*

## குற்றபடுத்துதல் Judgement;

'KRINO 'என்றால் – தீர்ப்பை தீர்ப்பதற்கு, தண்டனைக்கு, நியாயமான முறையில் கண்டனம் செய்ய, தீர்மானிக்க, முடிவு செய்ய.

## பகுத்தறிதல் Vs குற்றபடுத்துதல் ;

அகராதியில் பகுத்தறிதல் என்ற வார்த்தைக்கு கிட்டத்தட்ட இரண்டு எதிர்மறை வரையறைகள் உள்ளன.

பகுத்தறிதல் என்பது, தீர்ப்பு வழங்குவதற்கான திறனைக் குறிக்கிறது என்பதால், இந்த வரையறையை முதலில் பார்ப்போம்.

**மத்தேயு 7:1,** நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப் படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.

இந்த வசனம் நியாயம் தீர்க்காதிருங்கள் என்று சொல்கிறது.

நாம் நியாயந்தீர்க்க வேண்டும் என்று சொல்லும் வசனங்கள் வேதாகமத்தில் பல இடங்களும் உள்ளன.

**1 கொரிந்தியர் 2:15–16,** 15 ஆவிக்குரியவன் எல்லா வற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.
16. **கர்த்தருக்குப்** போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.

***யாக்கோபு 5: 19-20,*** [19.] *சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம்போகும்போது, மற்றொருவன் அவனைத்திருப்பினால்,* [20.] *தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.*

***எபிரெயர் 5:14,*** *பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.*

***யோவான் 7:24,*** *தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள் என்றார்.*

***1 கொரிந்தியர் 6:5,*** *உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா?*

***நீதிமொழிகள் 10:13,*** *புத்திமானுடைய உதடுகளில் விளங்குவது ஞானம்; மதிகேடனுடைய முதுகுக்கு ஏற்றது பிரம்பு.*

***நீதிமொழிகள் 3: 21,*** *என் மகனே, இவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; மெய்ஞ்ஞானத்தையும் நல்லாலோசனையையும் காத்துக்கொள்.*

அன்பற்ற, பாசாங்குத்தனமான மற்றும் நிரந்தரமான நோக்கங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கக் கூடாது என்று மத்தேயு 7 நமக்கு கட்டளையிடுகிறது.

**மத்தேயு 7:1-3,** நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். [2] ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். [3.] நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

நாம் யாவரும் குறைபாடற்றவர்கள் கிடையாது, ஆதலால் வெறுமனே கடுமையாக தீர்ப்பளிக்காதீர்கள். நாம் தோல்வி அடைந்த மற்றவர்களிடம் காட்டும் அதே அணுகுமுறையால் நாமும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படுவோம்.

சபையாகிய சரீரத்தை பாதிக்கும் வண்ணம் ஒருவர் எதாவது செய்தால் அவரை எப்படி நிதானித்துஅறிவது.

ஒருவரின் தனிப்பட்ட நிலையை நீங்கள் எப்படி தீர்ப்பீர்கள்?

முதலாவது சபையை பாதிக்கும் நபரின் செயலை எப்படி நிதானித்து அறிவது என்பதை பார்ப்போம்.

1. ***அப்போஸ்தலன் பவுலும் பேதுருவும்.***

*இது அந்தியோகியா சபையில் நடந்தது.*

**அப்போஸ்தலர் 11:26,** *அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.*

*இந்த தேவாலயத்தில் புறஜாதினியார் பெரும்பான்மையாகவும் யூதர்கள் சிறுபாண்மை யானர்வகலாய் இருந்தனர். ஒரு யூதன் புறஜாதியரோடு அமர்ந்து உணவு உண்பது என்பதை யூத சட்டம் அனுமதியாது.*

**அப்போஸ்தலர் 10:28,** *அவர்களை நோக்கி: அந்நிய ஜாதியானுடனே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப் பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனுஷனையும் தீட்டுள்ள வனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார்.*

*புறஜாதி கிருஸ்தவர்கள் என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதை குறித்து அப்போஸ்தலர்களுடன் கலந்தாலோசிக்க ஜெருசலேம் சபையில் கூடினார்கள். அவர்கள் யூத பழக்க வழக்கங்களை பின்பற்ற வேண்டும அல்லது அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைக்குறித்து பேசினார்கள். பின்னர்*

அந்த சட்டங்கள் எதையும் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு செய்தனர்.

ஆனால் ஜெருசலேமிலிருந்து சில யூதர்கள் அந்தியோகியாவுக்கு வந்தபோது, பேதுரு மெதுவாக யூத கிறிஸ்தவர்களோடு தொடர்புகொண்டு அவர்களுடன் அமர்ந்து உண்ணத்தொடங்கினார்.

**காலத்தியர் 2:12,** எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்கு முன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான்.

பேதுரு குறித்தான வார்த்தை ஜெருசலேமிற்கு போயிருக்கலாம் என்று அவர் நினைத்தபடியால் ஜெருசலேமிலுள்ள யூதர்களை குறித்து அச்சம் கொண்டார்.

யூதர்களுக்கும் புறஜாதினர்களுக்கும் இடையே எந்த பிரிவும் இல்லை என்று காலத்தியர் சபைக்கு பவுல் பிரசங்கித்தார். மேலும் அவர் ஆண் பெண் பாகுபாடு இல்லை என்பதைக்குறித்தும் சபைக்கு போதித்தார்.

**காலத்தியர் 3:28,** யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.

எபேசிய சபைக்கு பவுல் எழுதின கடிதத்தில் விருத்தசேதனம் மற்றும் விருத்தசேதனமல்லாத மரபுகளை குறித்து நாம்

கவலைப்படத்தேவையில்லை. ஏன் என்றால் இயேசுவானவர் நமக்கும் பிதாவுக்கும் இடையிலான தடுப்பு சுவரை அகற்றி விட்டார்.

**எபேசியர் 2:14-15,** எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, 15. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,

இந்த வசனத்தின்படி பேதுருவை பவுல் ஒரு குற்றவாளியாக எண்ணினார். அதற்கு காரணம்

- சுவிசேஷத்தின்படி நடக்காததால்
- தன் நடவடிக்கையின் மூலம் யூத மரபுகள் மதிப்பு வாய்ந்ததாக காட்டியதால்
- இதன் மூலம் கிருபையினால் கிடைத்த இரட்சிப்பை மாசுபடுத்தியதால்
- புறஜாதி கிறிஸ்துவன் யூத பழக்க வழக்கங்களை பின்பற்றியதால்.
- கடைசியாக யூதருக்கும் புறஜாதியினருக்கும் இடையே பிரிவு உண்டுபண்ணினதால்.

இந்த வகையான பாவம் அவர்களைச் சுற்றியுள்ள மக்களை எவ்வாறு பாதிக்கிறது?

அப்போஸ்தலர் பர்னபாஸ், முட்டாள்தனமாக பேதுரு உடன் இணைந்து அவரும் யூதர்களோடு மாத்திரம் சாப்பிட்டார் என்றால் உங்களால் நம்பமுடிகிறதா?

பேதுருவினால் பர்னாபாஸ் அவருடன் இணைந்தார். அதன் பிறகு அநேக யூதர்கள் அவருடன் சேர்ந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

தேவன் ஒருவருக்கு ஊழியத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டை கொடுக்கும் போது அவர்கள் செய்யும் பாவம் சபையாகிய சரீரத்தை பாதிக்கிறது என்பதை நம்மால் காணமுடியும்.

அப்போஸ்தலர் பவுலின் பார்வையில் ஒரு மாயக்காரனைப் போல பேதுருவைக் காட்டியது என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.

நீங்கள் அப்போஸ்தலனாகிய பவுல் அல்லது சக நண்பன் ஒருவனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

நீங்கள் பேதுருவை சரி செய்ய என்ன பரிந்துரை செய்வீர்கள்?

பேதுரு சாதாரண மனிதர் அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் அப்போஸ்தலரின் தலைமையாக இருந்தார். அவர் சபையின் தலைவராக கருதப்பட்டார் இன்று கூட கத்தோலிக்க சபைகள் பேதுருவை கிறிஸ்துவ சபையின் முக்கிய தூண் என்று நம்புகிறார்கள்.

பேதுருவிடம் நேரடியாக பேசலாம் அல்லது உங்களுடன் இரு தலைவர்களை அழைத்து செல்லலாம்.

*சில வருடங்களுக்கு முன்னர் இரண்டு பேர்கள் பேதுருவிடம் ஒரு பொய்யைக் கூறினார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (அப்போஸ்தலர் 4)*. *பின்னர் அவர்கள் இருவரும் ஒன்றுக்கு பின்பு ஒருவராய் இறந்து விட்டார்கள்*. *நீங்கள் கையாள்வது சாதாரண நபர் அல்லவே. எனவே, எத்தனை தலைவர்கள் உங்களுடன் வர முடிவு செய்திருப்பார்கள் என்று நான் வியப்படைகிறேன்?*

*இந்த சூழ்நிலையை பவுல் எவ்வாறு கையாண்டார்?*

- *பவுல் அவரோடு நேருக்கு நேராக நின்றார்*.
- *பவுல் பேதுருவைக் கடிந்து கொண்டார்*
- *எல்லாருக்கும் முன்னால் பவுல் அதை செய்தார்*!

***காலத்தியர் 2:14,*** *இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச்சொன்னது என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?*

*பவுல் மட்டும் பேதுருவை எதிர்கொண்டார், அவர் அவரைக் கடிந்துகொண்டு அவரை திருத்தினார்*. *பல நூற்றாண்டுகள் கழித்தும் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக கலாத்தியர் சபைக்கும், கிறிஸ்துவின் பரந்த சபைக்கும் அதே விஷயத்தையும் அவர் எழுதினார்*. *இன்று நாம் அதைப் படித்து வருகிறோம்*.

**பேதுருவின் வீழ்ச்சி மற்றும் ஏற்றுக்கொள்ளும் படிப்பினைகள்.**

1. எனவே, ஒருவர் மற்றவரின் விசுவாசத்தை அடக்க முயன்றால், நீங்கள் அமைதியாக இருக்கக்கூடாது. தேவனுடைய வார்த்தையின்படி பேச வேண்டும்.
2. பேதுருவுக்கு அவர் சுவிசேஷத்தை மறுப்பது அவருக்குத் தெரியாது. ஆனால் அவர் தனது வார்த்தைகளால் அல்ல, அவருடைய செயல்களால் அவ்வாறு செய்தார். கிறிஸ்தவர்கள் தங்கள் நடவடிக்கைளில் மிகவும் கவனமாக இருக்க நல்ல உணர்வுடன் செயல்பட வேண்டும். சுவிசேஷத்தை முழுமையாகப் புரிந்துகொண்டு மேலும் தொடர்ந்து வாழ்வதற்கு முயலவும்.
3. விசுவாசத்தின் வீரர்களும் வீழ்ந்துபோவார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பேதுருவும் மற்றவர்களுடன் சேர்ந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது தேவன் அவர்களை 2 முதல் 5-ம் அதிகாரங்களில் வல்லமைப்படுத்தினார். ஒரு மனிதன் எவ்வளவு ஆவிக்குரியவராய் இருந்தாலும்கூட அவர் எப்பொழுதும் பாவம் செய்ய முடியும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.
4. நமது அதிகாரம் வேதாகம கோட்பாடுகளிலிருந்து வருகிறது, இது நம்முடைய நிலையைவிட அதிகம் என்பதை நாம் இந்த பத்தியில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.
5. பவுலின் அறிவுயுரையை பேதுரு ஏற்றுக் கொண்ட விதத்தைப் பாருங்கள், பின்னர் அவர் ஒரு கடிதம்

*எழுதிய போது அவர் அப்போஸ்தலனாகிய பவுலை பாராட்டுகிறார்.*

***2 பேதுரு 3:15-16***, *மேலும் நம்முடைய கர்த்தரின் நீடியபொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்;* [16]*எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாத வர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்.*

*பவுல் எப்போதும் தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றுவதில் கவனமாக இருக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார்.*

1. *திடமான சத்தியத்திற்கு/கோட்பாட்டிற்கு நெருங்கிய கவனம் செலுத்துங்கள்,*
2. *வேதாகமத்தை பிரசங்கியுங்கள்,*
3. *சத்தியத்தை காத்துகொள்ளுங்கள்,*
4. *வெறுமையான பேச்சை தவிர்க்கவும்,*
5. *உலக ஞானத்தை விலக்கவும்*
6. *தவறான போதகர்களிடமிருந்து விலகவும்,*
7. *சத்தியத்தை எதிர்க்கிறவர்களை கடிந்துகொள்ளவும்*

8. *சத்தியத்திற்கும் பொய்களுக்கும் இடையிலான வேறுபாடுகளுக்கு விழிப்புடன் இருக்க வேண்டும்,*
9. *ஆராய்ந்து அறிந்துகொள்ளவேண்டும்*
10. *தவறான கோட்பாட்டை கடிந்துகொள்ள வேண்டும்.*

## 2. விசுவாசத்தை விட்டு விலகிப்போனவர்களின் பெயர்களை சுட்டிக்காட்ட தயங்கவில்லை.

*கொலோசெயர்க்கு எழுதிய கடிதத்தில் பவுல் எழுதியபோது தேமா அங்கு இருந்தார், ஊழியத்தில் விசுவாசமுள்ளவராக இருந்தார், அங்கு இறைவனுக்கு சேவை செய்தார்.*

**கொலோசெயர் 4:14,** *பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், தேமாவும், உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.*

*தன்னுடைய சக வேலையாளியான பிலேமோனுக்கு எழுதுகையில் அவர் அவரைப் பற்றி குறிப்பிடுகிறார்.*

**பிலேமோன் 1:24,** *என் உடன்வேலையாட்களாகிய மாற்குவும், அரிஸ்தர்க்கும், தேமாவும், லூக்காவும் உமக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.*

**2 தீமோத்தேயு 4:10,** *ஏனென்றால், தேமா இப் பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப்பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்;*

கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்.

பவுல் தன்னுடைய கடைசி கடிதத்தை அவருடைய ஆன்மீக மகன் தீமோத்தேயுவுக்கு எழுதியபோது, தேமா உலகத்தின்மேல் ஆசை வைத்து விசுவாசத்தை விட்டுவிட்டான் .

யூதாஸ் போன்றவர்கள் உங்கள் நடுவில் எப்போதும் இருப்பார்கள், ஆனால் அவர்களைப் புரிந்துகொள்வதும், அவர்களைத் வெளியில் தெரியப்படுத்துவதும் நம்முடைய பொறுப்பு.

**3. இயேசு பரிசேயரைக் கடிந்து கொண்டார். (அந்த நாட்களின் போதகர்கள் என்று அழைக்கப்படுபவர்கள்) கடுமையாகவும் வெளிப்படையாகவும்.**

கிருபையோடும் இரக்கத்தோடும் நேசிக்கிற தேவனே தலைவர்களை சபிப்பதை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? **மத்தேயு 24**

1. மற்ற மக்கள் இரட்சிக்கப்படுவதை கடினமாக்குவதற்காக (v. 13)
2. மாறியவர்களை கெடுப்பதற்காக (v. 15)
3. முரட்டுத்தனமான மதத்திற்கு (v. 16-22)
4. உண்மையில் என்ன முக்கியமோ அதை புறக்கணிப்பதற்காக (v. 23-24)
5. சுய விருப்பம் உடையவர்களாக இருப்பதற்காக (v. 25-26)

6. *உள்ளே துன்மார்க்கமாக இருப்பதற்காக* (v. 27-28)
7. *தேவனுடைய தீர்க்கதரிசிகளை கொலை செய்ததற்காக (v, 29-36)*

*அவர் தனிப்பட்ட முறையில் இதைச் செய்யவில்லை, ஆனால் வெளிப்படையாக அவர் ஒவ்வொருவருக்கும் முன்பாக அம்பலப்படுத்தினார்.*

**4. *இயேசு அவர்களை அம்பலப்படுத்தினது மட்டுமல்லாமல் அவர்களை உடல் ரீதியிலும் அடித்து உதைத்தார்.***

*இயேசு வாழ்க்கையின் ஆரம்பத்திலும், பூமியில் இயேசு பண்ணின ஊழியத்தின் கடைசி வாரத்தில் இதைக் காணமுடிகின்றது.* யோவான் 2-ம் *அதிகாரம், இயேசு அங்கு உட்கார்ந்து சாட்டை பின்னி அவர்களை அடித்தார் என்று பார்க்கிறோம்.* மத்தேயு 21-ஐயும் யோவான் 2-ஐயும் *வாசிக்கவும்.*

*எனவே, என் அன்பான சகோதர சகோதரிகளே, சபையாகிய சரீரத்தில் புற்றுநோயை அம்பலப்படுத்துவதில் பயப்படாதீர்கள்.*